
பக்கங்கள் 22 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு


முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 11 வெள்ளிக்கிழமை 24.05.2024 அதிர்வு 298

## மான் கொம்புடன் ஒருவர் சிக்கினார்



(எஸ்.நிதர்ஷன்)

கிளிநொச்சியில் இருந்து பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்கு மான் கொம்பைக் கொண்டு வந்தவர் பொலிஸாரால் இன்று 04▶



# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாகத் தரமுயர்வு

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விரைவில் தேசிய வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன்மூலம் வடக்கில் சிறந்த சுகாதாரக் கட்டமைப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். 04▶



# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய ஒருவர் மாளிகாவத்தையில் வைத்து கைது

## இந்தியாவில் சிக்கிய நால்வருடன் நெருக்கமானவராம்



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கையர்களுடன் நெருங்கிய தொடர்புடைய இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பகுதியில் வைத்து மேற்படி நபர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவரான மொஹமட் நஃப்ரான், பாரியளவிலான போதைப் பொருள் வியாபாரியான மாளிகாவத்தை பொட்டா நௌபரின் மகன் என்பது தெரியவந்துள்ளது.

இதனிடையே, இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை ஐ.எஸ் ஐ.எஸ். அமைப்பின் உறுப்பினர்களை விசாரிப்பதற்காக பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னக்கோனின் அறிவுறுத்தலுக்கு அமைய விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. 04▶




## தொழிற்சங்கப் போராட்டக் காலத்தில்

# மருத்துவபீட புதிய கட்டடத் திறப்பு விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் எதிர்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)

பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் தொழிற்சங்கப் போராட்டக் காலத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் யாழ். போதனா வைத்தியசாலையுடன் இணைந்த புதிய கட்டடத் தொகுதியின் திறப்பு விழாவுக்கு எதிராக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் இன்று கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் த.சிவரூபன் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

"பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள உயர்வு மற்றும் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து எமது தொழிற்சங்கப் போராட்டமானது இம்மாதம் 2ஆம் திகதி நண்பகல் முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் இன்றி சகல பல்கலைக்கழகங்களும் செயற்படாது இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் எமது கோரிக்கைகளைத் தீர்த்துவைத்தலில் எவ்வித அக்கறையுமற்று காலங்கடத்தப்படுகின்றது.

இருந்தபோதிலும் இவ்வேளையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் யாழ். போதனா வைத்தியசாலையுடன் இணைந்த புதிய கட்டடத் தொகுதியானது இன்று (24) ஜனாதிபதி, கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு திறந்துவைக்கப்பட்டமையை யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கண் டிப்பதோடு இந்தச் செயற்பாடு எமது தொழிற்சங்கப் போராட்டத்தை மலினப்படுத்தும் செயற்பாடாகக் காணப்படு கின்றமையால் அதனை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக பிரதான வளாகம் மற்றும் மருத்துவபீடம் என்பவற்றின் வாயிலில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டதோடு, பிரதான வளாக முன்றலில் கண்டன ஆர்ப்பாட்டத்தையும் இன்று காலை 10.30 மணியளவில் நடத்தியிருந்தோம்." – என்றார்.









## இலங்கைக்குக் கடத்த முற்பட்ட

# பெருமளவு போதை மாத்திரைகள் தமிழகப் பொலிஸாரிடம் சிக்கின!









(ந.லோகதயாளன்)

இலங்கைக்குக் கடத்த முற்பட்ட பெருந்தொகை போதை மாத்திரைகள் தமிழகப் பொலிஸாரால் இன்று அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டத்தின் வேதாளைப் பகுதியூடாக இலங்கையில் போதை மாத்திரையாகப் பயன்படுத்தும் வலி நிவாரணி மாத்திரை கடத்தப்படுகின்றது என்று தமிழகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அந்தத் தகவலுக்கமைய தமிழகப் பொலிஸார் அந்தப் பகுதியில் மறைந்திருந்த வேளையில் ஒரு மாருதி வானில் கடற்கரைக்கு எடுத்து வந்த 5 இலட்சம் போதை மாத்திரைகள் தமிழகப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

50 ஆயிரம் மாத்திரைகள் கொண்ட 10 பெட்டி மாத்திரைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டு சட்ட நடவடிக்கைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

# யாழில் பனை மரம் முறிந்து வீழ்ந்து வீடொன்று சேதம்







(எஸ்.நிதர்ஷன்)

அதிக காற்று காரணமாக யாழ்ப்பாணம் - கொக்குவில் மேற்கு பகுதியில் உள்ள வீடொன்றின் மீது பனை மரம் முறிந்து வீழ்ந்துள்ளது. இதனால் அந்த வீடு சேதமடைந்துள்ளது.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஜே 125 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வீடே நேற்று இவ்வாறு சேதமாகியுள்ளது.

அதேவேளை, நேற்று வீசிய கடும் காற்று காரணமாக நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிக்கையிட்டுள்ளது.

# மாங்கேணி கடலில் மூழ்கி ஒருவர் சாவு!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள மாங்கேணி கடலில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாங்கேணியைச் சேர்ந்த 41 வயதுடைய அனஸ்டன் ஹாரலஸ் அலேசியஸ் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# விபத்தில் சிக்கி காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கிளிநொச்சியைச் சேர்ந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி பகுதியைச் சேர்ந்த தம்பிராசா ரவிசந்திரன் (வயது 35) என்பவரே உயிரிழந்துள்ளார்.



கனகபுரம் பகுதியில் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

# சீரற்ற காலநிலையால் 6 பேர் பரிதாப மரணம்!

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் 6 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

18 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்திலேயே பெருமளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மான் கொம்புடன்...**

கைது செய்யப்பட்டார்.

யாழ். பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதான 42 வயதான சந்தேகநபர் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

**ஐ.எஸ்.ஐ.எஸ்....**

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவு அடங்களாக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு இலங்கையர்கள் தொடர்பான தகவல்களை இந்தக் குழு கோரியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த நால்வரும் தொடர்புகளை வைத்திருந்த இலங்கையர்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, குறித்த நால்வருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த நபர் மாளிகாவத்தையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவினருக்கு விமானப் பயணச்சீட்டுகளை விநியோகித்தமை உள்ளிட்ட பல்வேறு உதவிகளைப் புரிந்தவர் இவர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், சந்தேகநபர் தற்போது பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

**யாழ்ப்பாணம்...**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்காக யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத் தொகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

புதிய கட்டடத் தொகுதியில் இரண்டு சத்திர சிகிச்சைக் கூடங்களும், ஒரு சத்திர சிகிச்சைக் கூடமும், எண்டோஸ்கோபி மற்றும் மேமோகிராம், கருவுறுதல் பராமரிப்பு, யூரோடைனமிக் சேவைகள், கேட்போர் கூடம், முதுகலை மையம், மருத்துவப் பணியாளர் அறை மற்றும் கற்பித்தல் வசதிகள் உள்ளன.

இந்தக் கட்டடத் தொகுதி 70 கோடி ரூபா செலவில் கல்வி அமைச்சில் நிதி ஒதுக்கீட்டுக்கமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பொருட்களின் விலை அதிகரிப்பால் செலவு அதிகரித்து கட்டடத் தொகுதி இன்னும் நிறைவு பெறாமல் இருப்பதுடன் கட்டடத்தை முழுமையாக நிர்மாணித்துப் பூர்த்தி செய்ய இன்னமும் 13 கோடி ரூபா தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# யாழ். நாக விகாரையில் வெசாக் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நாக விகாரையின் வெசாக் தின நிகழ்வு நேற்று மாலை நாக விகாரையின் விகாராதிபதி சிறி விமலதேரர் தலைமையில் நடைபெற்றது

நாக விகாரையில் பூஜை வழிபாடுகள் நடைபெற்று விசாக் கூடுகள் திறந்து வைத்து தானங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம். சார்ள்ஸ், யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதி மேயர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க, வடக்கு மாகாண கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரோகித அபயசிங்க, பலாலி விமானப் படைத் தளபதி குறூப் கப்டன் சமிந்த கேரத், வடக்கு மாகாண பிரதம செயலாளர் லட்சுமணன் இளங்கோவன், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் போன்றோர் கலந்து கொண்டிருந்தனர்.














நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ராஜபக்ஷகளுக்கு முடிவுரை

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியவை தொடர்பாக பிவித்துரு ஹெல உறுமய கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில்ல தெரிவித்துள்ள இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியவை.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துமாறு பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தொடர்ந்து வலியுறுத்திய போது, நாடாளுமன்றத்தின்அறுதிப்பெரும்பான்மையான 113 உறுப்பினர்களின் ஆதரவுடன் அவர்களின் கையெழுத்துக்கள் ஊடாக, நாடாளுமன்றக் கலைப்புக்கான கோரிக்கையாக உறுதிப்படுத்திக் கொண்டு வாருங்கள், நாடாளுமன்றத்தை கலைக்கலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பஸில் ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டுள்ளார் என்று உதய கம்மன்பில்ல தகவல் வெளியிடுகின்றார்.

நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு 113 உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதற்கு பஸில் ராஜபக்ஷ எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. அதனால் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் பஸில் ராஜபக்ஷவின் முயற்சி பலனளிக்கவில்லை என்பது உதய கம்மன்பில்ல வெளியிடும் தகவல்.

அது உண்மையாகவிருக்கலாம்.

பஸில் ராஜபக்ஷவின் சிறிலங்கா பொதுஜன பெரமுனை கட்சிதான் இப்போதும் ஆளும் கட்சி. அந்தக் கட்சியின் சார்பில் தெரிவான எம்.பிக்கள் பலர் அந்தக் கட்டமைப்பை விட்டுப் பிரிந்து, தனிதனிக் குழுக்களாக நாடாளுமன்றத்தில் இயங்கினாலும், அக்கட்சியில் இன்னும் நாடாளுமன்ற அறுதிப் பெரும்பான்மையான 113 உறுப்பினர்கள் ஓரணியில் - ஆளும் தரப்பாக - இருக்கின்றார்கள். ஆனால் அவர்களைக் கட்டுப்படுத்திக் கையாளும் நிலையில் இன்று பஸில் ராஜபக்ஷ இல்லை. அதனால் தான் தமது கட்சியில் இன்னும் 113 இற்கும் குறையாத எம்.பிக்களை வைத்திருந்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரும் நாடாளுமன்றக் கலைப்புக்கு ஆதரவான கடிதத்தை உரிய எண்ணிக்கை எம்.பிக்களின் ஆதரவுடன் பஸில் ராஜபக்ஷவினால் கொடுக்க முடியவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம். ஆகவே அந்த கட்சியின் தலைவர் யார் என்பது கேள்விக் குறியாக உள்ளது என்கின்றார் உதய கம்மன்பில்ல.

அதை ஒட்டித்தான் அவர் சுட்டும் அடுத்த விடயம் கட்டவிழ்கின்றது.

இரண்டரை வருட ஜனாதிபதி பதவிக் காலத்தை வழங்கியதற்கே மொட்டுக் கட்சியின் எம்.பிக்களை தன்வசம் வளைத்துப் போட்டு ராஜபக்ஷக்களின் பிடியிலிருந்து அவர்களை நழுவ வைத்து, ராஜபக்ஷக்களுக்கு எதிராகவே திருப்பி விட்டிருக்கின்றார் ரணில்.

இன்னொரு ஐந்து வருடம் பதவிக்காலத்தை ரணில் விக்கிரமசிங்கவுக்கு மொட்டுக் கட்சியினர் தங்கள் கட்சியின் ஊடாக உறுதிப்படுத்திக் கொடுப்பார்களேயானால் மொட்டுக் கட்சியின் கதி அதோகதிதான். அதன் எதிர்காலம் கெட்டுக் குட்டிச்சுவராகிவிடும் என்ற கணக்கில் எச்சரிக்கின்றார் உதய கம்மன்பில்ல.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறக்குமாறு பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ராஜபக்ஷக்களிடம் வலியுறுத்தியுள்ளார்கள். பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களாணை பெற்று மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பண்டாரநாயக்க குடும்பத்துக்கு ஏற்பட்ட அரசியல் நிலைமை தமக்கும் ஏற்படுமோ என ராஜபக்ஷக்கள் இப்போது அச்சமடைகிறார்கள் - என்று உதய கம்மன்பில்ல வெளியிடும் தகவல் பெரும்பாலும் சரியானதுதான்.

சுதந்திரக் கட்சிக்குள் ராஜபக்ஷக்களின் எழுச்சி, அக்கட்சியை ஸ்தாபித்து இலங்கை அரசியலில் கொடி கட்டிப் பறந்த பண்டாரநாயக்கா குடும்ப சாம்ராஜ்யத்தையே அடியோடு சரித்தது என்பது இலங்கை அரசியல் அனுபவம்.

அதுவேதான், மீண்டும் ஐந்து வருடங்களுக்கு மொட்டுக் கட்சியின் முதுகில் ஏறி அதிகார தர்பாருக்கு வர ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டால் மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர்களான ராஜபக்ஷக்களின் அரசியல் சாம் ராஜ்யத்துக்கும் குடும்பத்துக்கும் அரசியலில் நேரும் என்பதே உதய கம்மன்பில்லவின் கணிப்பு.

அந்தக் கணிப்பில் தப்பில்லை. தென்னிலங்கை மக்கள் மத்தியில் அரசியல் கரிஸ்மா மிக்க மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் செயலிழக்க முன்னர் ராஜபக்ஷக்கள் தங்கள் செல்வாக்கை மீள நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். தவறினால் அல்லது அதை வேறு தரப்புகளிடம் கையளித்தால் பண்டாரநாயக்கர்களின் கதி மாதிரி ராஜபக்ஷகளின் தர்பாருக்கும் முடிவுரை எழுத வேண்டியதுதான்.



# சொந்த நிதியில் கொள்வனவு செய்து மருந்துகள் கையளித்த வைத்தியர்!

**(எம்.எம்.ஜெஸ்மின்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு உட்பட்ட வைத்தியசாலைகளில் உள்ள பற் சிகிச்சைப் பிரிவுகளில் குறிப்பிட்ட சில மருந்துகள் தட்டுப்பாடாகவுள்ளன.

அந்த மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் கல்முனை பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஹபீப் முஹம்மட் மிக அவசியத் தேவையாக காணப்பட்ட ஒரு சில மருந்துகளை வழங்கியுள்ளார்.

இந்த மருந்துப் பொருள்களை (20) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் மற்றும் பிராந்திய உளநல மருத்துவ பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. நௌபல் ஆகியோரும் கலந்து கொண்டனர். டாக்டர் ஹபீப் முஹம்மட்டின் முன் மாதிரியான இந்த செயற்பாட்டைப் பாராட்டிய பணிப்பாளர் அவருக்கு நன்றி தெரிவித்தார்.





# மாணவர்களுக்கான குடி தண்ணீர் விஸ்தரிப்பும் குழாக் கிணறு திறப்பும்

(எம்.எம்.ஜெஸ்மின்)

சாய்ந்தமருது லீடர் எம்.எச். எம்.அஸ்ரப் வித்தியாலயத்திற்கு றஹ்மத் பௌண்டேஷன் அமைப்பால் குழாக் கிணறும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாணவர்களுக்கான குடி தண்ணீர் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் தேவை கருதி பாடசாலையின் சமுகத்தின் வேண்டுகோளை ஏற்று மாணவர்களுக்கான குடி தண்ணீர் விஸ்தரிப்பு மற்றும் குழாய்க்கிணறு தொகுதியை திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு றஹ்மத் பௌண்டேசன் அமைப்பின் தலைவரும், முன்னாள் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வருமான றஹ்மத் மன்சூரின் அழைப்பின் பேரில் இலங்கைக்கான மலேஷியத் தூதர் மேதகு பட்லி ஹிஸாம் ஆதம் தமது பாரியார் சகிதம் கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் றஹ்மத் மன்சூர் அமைப்பின் தலைவர் றகுமத் மன்சூர, அமைப்பின் உறுப்பினர்கள், வை. டபிள்யூ.எம்.ஏ. அமைப்பின் தலைவி திருமதி பவாசா தாஹா மற்றும் அமைப்பின் செயலாளர், பொருளாளர், முன்னாள் தலைவர், அமைப்பின் ஏனைய அங்கத்தவர்கள், பிரதி அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.




# சோமசுந்தரம் சுரேஷ்: யாழ். இந்துவின் மைந்தன்!

**(சோமசுந்தரம் சுரேஷின் முதலாவது ஆண்டு நினைவு நாள் (24) இன்றாகும்.)**

“மாபெரும் சபை தனில்
நீ நடந்தால் உனக்கு
மாலைகள் விழ வேண்டும் – ஒரு
மாற்றுக் குறையாத மன்னவன் இவனென்று
போற்றிப் புகழ வேண்டும்”

திரைப்படப் பாடல் ஒன்றின் வரிகள் இவை. 2023 ஆம் ஆண்டு மே மாதம் பிற்பகுதி, ஒரு பெரிய சபையில், சுரேஷ் நடப்பதற்குப் பதில் நீண்ட துயிலில் கிடக்கிறான். மாலைகள் வந்து விழுகின்றன. அங்கிருப்போர் அவனைப் போற்றிப் புகழ்கிறார்கள். சொற்பூக்கள் சொரிகிறார்கள். மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று மனம் உருகுகிறார்கள்.

சிறு வயதிலிருந்து சுரேஷ் கால் வைத்த சபைகள்தான் வித்தியாசமே தவிர அவனுக்குக் கிடைத்த வரவேற்பு எப்போதும் ஒன்றே. ஏனென்றால், பாடசாலை விளையாட்டு மைதானம், அவன், மேற்கொண்ட படிப்பு, தேடிய வேலை, கற்றுக் கொண்ட ஏனைய கலைகள் போன்றவற்றை சபை என்று கருதினால், அங்கெல்லாம் முடிசூடா மன்னன் அவன். முக்கியமாக எதிரி இல்லா மன்னாதி மன்னன்.

சுரேஷ் பலவகையான விளையாட்டுகளுக்காகப் பல தடவை, பல மைதானங்களில், பல மட்டங்களில் நுழைந்திருக்கிறான். எப்போதும் வெற்றி வாகை சூடியே திரும்பி வந்திருக்கிறான். இங்கே என்ன சிறப்பு என்றால், சுரேஷுடன் விளையாடியவர்கள், எதிரணியைச் சேர்ந்தவர்கள், பார்வையாளர்கள் என்று எவருக்கும் சுரேஷ் மேல் எரிச்சல், பொறாமை,கோபம், பகை எதுவுமே வந்ததில்லை.

அதற்கு மாறாக, அவர்கள் மனதில் இருந்ததெல்லாம் ‘எப்படி சுரேஷ் போல தாமும் விளையாடலாம்’ என்ற கேள்வியே. தன்னைச் சூழ்ந்தவர்களை எல்லாம் தன் ரசிகர்களாக மாற்றியது அவனுடைய சிறப்பியல்பு. அவனே அறியாமல் நடந்த ஆளுமைத் தொடுகையது.

பாடசாலை நாள்களில் வகுப்பறையை விட விளையாட்டு மைதானத்தில் அதிக நேரம் செலவிட்டவன். ஏன், நேரத்தை முதலிட்டவன் என்றும் சொல்லலாம். ஏனென்றால், அதற்கான பலனை தனக்காகவும், தனது அணி, பாடசாலை அல்லது கழகத்துக்காக நேர்த்தியாகக் கொண்டு வந்தவன். திறமைகளை கூர்மைப்படுத்தி செய்ததால் எல்லாவற்றிலும் பலன் கிடைத்தது.

பின்னர், ஒரு கட்டத்தில், எல்லா விளையாட்டுகளையும் தற்காலிகமாக நிறுத்தி கொழும்பில் மேற்படிப்பு படித்தான். அங்கும் பலர் அனுபவித்த உலகாயத இன்பங்களை



உதறி தனக்கு எது மிக முக்கியம் என்பதில் தன் கவனத்தை நேர்நோக்கி செய்து தன் திறமையை நிரூபித்து பெருமைப்படக் கூடிய தொழில் பெற்று அமெரிக்கா சென்றான்.

புகைப்படம் எடுத்தல், ஓவியம் வரைதல், சமையல், சைக்கிள் ஓட்டுதல், மலையேற்றம் என்று தன் மனதையும் உடலையும் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருந்தவன். குடும்பத்துக்காகவும் தரமான நேரம் ஒதுக்கி வாழ்க்கையை சமநிலையாகக் கொண்டு போனவன்.

எப்போதும் ஒரே மாதிரியான சிரிப்பு, பல்வேறுபட்ட திறமைகளும் பொழுது போக்குகளும், எடுத்த வேலையில் கவனக் குவிப்பு, எவருடனும் பகைமை பாராட்டாமை என சுரேஷ் பழகிய அனைவரும் ஒரே கருத்தைக் கொண்டிருந்தமை தான் வியப்பும் சிறப்பும்.

ஒவ்வொரு வயது காலப் பகுதிகளிலும் அந்த நேரத்துக்கு மிகமுக்கியமான விஷயங்களில் தன் திறமையையும், கவனத்தையும் செலுத்தி தன் கடமையைச் சரிவரச் செய்தவன்.

2014 ஆம் ஆண்டிலிருந்து தன் பாடசாலை நண்பர்களை சந்திப்பதற்கான வாய்ப்புகளையும் தவற விடாதவன். அந்தச் சந்திப்புகளில் அவனது பண்பையும் முதிர்ச்சியையும் நாங்கள் சிலாகித்துக் கொண்டு வரும் போது ஓரிரவு, பிள்ளைகளுக்குக் கதைசொல்லி உறங்க வைத்துவிட்டு தானும் உறங்க என்று போனவன் மேலுலகத்திலுள்ள சபைக்கு வீறு நடை போட்டு போய்விட்டான். அவனது வாழ்க்கையை எங்களுக்குக் கதையாக விட்டுச் சென்றுவிட்டான்.

**சிவப்பிரகாஷ் வயித்தீஸ்வரன்**

# பிலியந்தலை நவோதய கல்லூரியில் இராணுவத்தினர் சிரமதானப் பணி!

**(எம்.எம்.ஜெஸ்மின்)**

பிலியந்தலை சொய்சா நவோதய கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க, இராணுவ இசைக்குழு மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தும் படையினர் கல்லூரியின் சுற்றுப் புறங்களை சிரமதான அடிப்படையில் சுத்தம் செய்தனர்.



இராணுவ இசைக்குழு மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தும் குழுவின் துணைத் தளபதி மற்றும் பணிப்பாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் இராணுவத்தினர் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.




# உக்ரைன் உலைக் களத்தில் பலியாகும் கூலிப் படைகள்!

■ நவீனன்

இலங்கையின் நூற்றுக் கணக்கான முன்னாள் படைவீரர்கள் உக்ரைனிய எல்லையிலுள்ள போர்க் களங்களில் உயிரிழக்கின்றனர் என்று அங்கிருந்து தப்பிய முன்னாள் படைவீரர் ஒருவர் பரபரப்பு தகவலை தெரிவித்துள்ளார்.

**இலங்கை இராணுவ கூலிப் படைகள்**

கூலிப் படைகளால் உக்ரைன – ரஷ்ய யுத்த களத்தில் மேலும் ஒரு புதிய ஆபத்தின் வளர்ச்சி போக்கை வெளிப்படுத்தி உள்ளது. அதுதான் தனியார் ராணுவ கூலிப்படைகளின் எண்ணிக்கை வளர்ச்சியாகும்.

அண்மையில் ரஷ்ய – உக்ரைன் மோதலில் இலங்கையின் பதினாறு இராணுவத்தினர் உயிரிழந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

தனியார் ராணுவ கூலிப்படைகளுக்கு வன்முறைகள் ஒருபொருட்டே இல்லை. கொடூரங்களை தவிர வேறு எதுவும் அவர்களுக்கு மீதம் இருக்காது. அதிக கூலி, அதிக கொடுமைகள் என்ற கோட்பாட்டில்தான் இந்த தனியார் ராணுவப்படைகள் செயல்படுகின்றன.

இலங்கையிலிருந்து பலகுழுக்களால் வெளிநாட்டு வேலைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள இலங்கையை சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட முன்னாள் படைவீரர்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதே எண்ணிக்கையலானவர்கள் டொனெட்ஸ்க் போன்ற பிராந்தியங்களிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

உக்ரைன் – ரஷ்ய போர்களங்களுக்கு இலங்கையில் ஆள்களைச் சேர்ப்பது கடந்த மூன்று மாதங்களில் தீவிரமடைந்துள்ளது. இதேவேளை அங்கே போக ஒரு வாரத்துக்குள் கடவுச்சீட்டு வீசாவுடன் கிடைப்பதாக, அடுத்த சில நாள்களில் அவர்கள் உக்ரேனிய எல்லைகளுக்கு அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கியூபா போன்ற இலத்தீன் நாடுகளில் இருந்தும் பெருமளவு கூலிப்படையினர் ரஷ்யாவில் காணப்படுகின்றனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**ஆட்கடத்தலில் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள்**

ரஷ்ய உக்ரைன் போரில் ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை கூலிப்படையாக பயன்படுத்தி ஆள்கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட மேலும் பலர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

தற்போது இலங்கை இராணுவத்தில் பொது மன்னிப்புக்காக சுமார் 15,000 பேர் விண்ணப்பித்துள்ளனர். 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் சட்டவிரோதமான முறையில் இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை 357 ஆக காணப்பட்டது.

அத்துடன் சட்டவிரோதமான முறையில் சேவையிலிருந்து விலகி மீண்டும் பணிக்குத் திரும்பியவர்களின் எண்ணிக்கை 799 என அறிவிக்கப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றி அங்கவீனமடைந்த அல்லது யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினருக்கு 55 வயது வரையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் பல முன்னாள் இராணுவ வீரர்கள் கூலிப்படையாக அனுப்பப்படுவதற்கு, அரசின் உயர் அதிகாரிகளும் பொறுப்பு என்றே கூறப்படுகிறது.

**இந்தியா - நேபாள கூலிப்படைகள்**

உக்ரைனில் தனியார் ராணுவ கூலிப்படையில் சேர்வதற்கு உலகம் முழுவதும் இருந்து பலர் ஆர்வமாக இருப்பதாக செய்திகள் வெளிவருகிறது. குறிப்பாக இந்தியா, நேபாள நாட்டிலிருந்து ஏராளமான இளைஞர்கள், முன்னாள் ராணுவ வீரர்கள், இத்தகைய தன்னார்வ இராணுவ குழுவில் சேர்கிறார்கள் என்று ஓர் செய்தி வெளிவந்துள்ளது.

அவ்வாறு சேரக்கூடிய வீரர்களுக்கு ஓராண்டுக்குப் பிறகு அந்த நாட்டு குடியுரிமை வழங்கப்படும் என்ற சலுகை இருப்பதாகவும் அதனால், மேலும் பலர்

தொடர்ச்சி▼

# உக்ரைன் உலைக் களத்தில் பலியாகும் கூலிப் படைகள்!

தொடர்ச்சி▲

சேருகிறார்கள் என்றும் தெரிகிறது.

நேபாள அரசு இது அவர்களுடைய தனிப்பட்ட விஷயம், நாங்கள் என்ன செய்ய முடியும் என்ற வகையில் கையை விரித்துக் கொண்டார்கள்.

இந்திய அரசு, நேபாள வீரர்களை ராணுவத்தில் எடுப்பதை நிறுத்திவிட்டது மட்டுமல்ல, அக்னி பாத் என்ற பெயரால் நிரந்தர ராணுவ பணியை ஒழித்துக் கட்டியதும் இதற்கு முக்கிய காரணம் என்றும் வேலை வாய்ப்பு அற்ற இளைஞர்கள் இதுபோன்ற அண்டை நாடுகளில் இணைவது இந்தியாவுக்கு ஆபத்து என்று தெரிவித் துள்ளது.

## ரஷ்ய வாக்னர் கூலிப் படைகள்

முன்பு ரஷ்யாவில் இயங்கிய தனியார் ராணுவப் கூலிப்படையான வாக்னர் குழுவும் உக்ரைன் யுத்தத்தில் தீவிரமாக களமாடியது. ஆனால் 2023 ஜூனில் தளபதி எவ்கேனி பிரிகோஷின் யுத்த களத்தில் இருக்கும் போது ரஷ்ய இராணுவ தலைமைக்கு எதிராக கலகத்தை ஆரம்பித்தார்.

ஆயினும் 24 மணி நேரத்தில் அவர் அறிவித்த கலகம் முடிவுக்கு வந்தது.

வாக்னர் குழுவின் கலகத்தை ரஷ்யாவின் அதிபர் விளாடிமிர் புடின் மக்களுக்கு எதிரான தேசத் துரோகம் என்று குற்றம் சாட்டி, ஆயுதங்கள் பறிமுதல் செய் யப்படும், மரண தண்டனை உட்பட சட்ட ரீதியான அனைத்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

உடனடியாக பிரிகோஷின் தனது கலகத்தை வாபஸ் வாங்குவதாக அறிவித்தார். யுத்த காலத்தில் இது ஒரு மோதலாக மாற வேண்டாம், அப்படிப்பட்ட மோதல் உக்ரைன் யுத்தத்திற்கு ரஷ்யாவிற்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்ற பின்புலத்தில் அவர் மீதான சட்ட நடவடிக்கை கைவிடப்பட்டு பெலாரஸ் நாட்டில் தஞ்ச மடைய அனுமதிக்கப்பட்டார்.

ஆனால் அவர் டூலா நகர விமான விபத்தில் கொல் லப்பட்டார். இந்த கலகத்தை அடுத்து விளாடிமிர் புடின் ரஷ்ய ராணுவத்தை ஒன்றுபடுத்தி இருப்பதுடன், மக்களின் ஆதரவையும் அதிகப்படுத்தி இருப்பதாக கள நிலவர தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமெரிக்க 'பிளாக் வாட்டர்' கூலிப் படைகள்

பனிப்போர் முடிந்த பிறகு அமெரிக்க தலைமையிலான தனியார் ராணுவ கூலிப்படைகள் எண்ணிக்கை மிக அதிகமாக பெருக்கப்பட்டது.

அமெரிக்காவில் பிளாக் வாட்டர் என்று சொல்லக் கூடிய தனியார் கூலிப்படை ராணுவம் தான் உலகத்தில் பெரியது. முன்னாள் ராணுவ அதிகாரி எரிக் பிரின்ஸ் என்பவரால் இந்தக் கூலிப்படை ஆரம்பிக்கப்பட்டது.

நூறுக்கும் மேற்பட்ட தனியார் ராணுவ கூலிப்படைகள் அமெரிக்காவில் செயல்படுவது தெரிய வருகிறது. ஜீ4எஸ் என்ற தனியார் ராணுவ கூலிப்படை அமெரிக் காவின் பாதுகாப்புக்காக 125 நாடுகளில் கிளை வைத்துள்ளது.

2006 முதல் 2008 ஆம் ஆண்டு வரை அமெரிக்க தொழிலாளர்கள் மீது தாக்குதலுக்கும் அமெரிக்கா தலையீடுகள் செய்யக் கூடிய நாடுகளில் மக்கள் எதிர்ப்பை அடக்குவதற்கும் இந்த கூலிப்படை பயன் படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்கிற பொழுது உள்நாடு மற்றும் வெளி நாடுகளில் பாதுகாப்பு அளிப்பதற்கான பொறுப்பு



இந்த கூலிப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆப்கானிஸ்தான், ஈராக் போரின் போது தான் அதிகமான அளவு கூலிப்படைகள் பயன்படுத்தப் பட்டன. பிளாக் வாட்டர் படை அதிக பங்கை இந்த இருநாடுகளிலும் செய்தது. 2003 ஆம் ஆண்டு ஈராக் நாட்டில் உள்ள அமெரிக்க ஆதரவு ராணுவத்துக்கும் பொலிஸாருக்கும் இவர்கள்தான் பயிற்சி கொடுத்தார்கள்.

2020 ஆம் ஆண்டு மட்டும் தனியார் ராணுவ கூலி படைகளுக்கான அமெரிக்காவின் முதலீடு 224 பில்லியன் டொலர் ஆகும். ஆனால் 2030 ஆம் ஆண்டு இது 457 பில்லியன் டாலர் அளவிற்கு உயரம் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது.

அனேகமாக ஒரு நாட்டின் ராணுவத்துக்குச் சமமாக தனியார் ராணுவ கூலிப்படைகளும் இன்றைய தினம் உருவாகிவிட்டது அல்லது உருவாக்கப்பட்டுள்ளது என்றே கருதலாம்.

## பிரித்தானிய எர்னிஷ் இன்டர்நேஷனல் கூலிப்படை

'ஏஜிஎஸ் டிபன்ஸ் சர்வீஸ்' (AGS Defence Services ) என்ற தனியார் ராணுவ கூலிப்படை இங்கிலாந்தில் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து ஈராக் யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டது.

யுத்தம் நடைபெற கூடிய இடங்களில் தூதரகங்களை பாதுகாக்கும் பொறுப்பை இந்த கூலிப்படை ஏற்றுக் கொண்டது. இங்கிலாந்தில் எர்னிஷ் இன்டர்நேஷனல் என்ற தனியார் ராணுவ கூலிப்படை ஈராக் நாட்டிற்கு அனுப்பப்பட்டு ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் கைதிகளை சித்தரவதை செய்யும் செயல்களில் ஈடுபட்டது.

அதிகமாக மனித உரிமை மீறலில் ஈடுபட்ட தனியார் ராணுவப் படை என்று குற்றச்சாட்டுக்கும் ஆளானது.

அதேவேளை, நார்த் பிரிட்டிஷ் சர்வீஸ் (North British Services) லிமிடெட் என்ற தனியார் ராணுவப்படை பிரிட்டனில் ஆரம்பிக்கப்பட்டு அமெரிக்க தனியார் ராணுவ படையுடன் இணைந்து டொமினிகள் குடியரசில் பதிவு செய்தார்கள். இந்த தனியார் ராணுவ கூலிப்படை தற்போது உக்ரைனுக்கு அதிகமான கூலிப்படைகளை அனுப்பி உள்ளது.

இந்தக் கூலிப்படையில் மூன்று ஆயிரத்துக்கு மேற் பட்ட முன்னாள் பிரிட்டிஷ் ராணுவ வீரர்களும், பிரான்ஸ், அமெரிக்காவை சேர்ந்தவர்களும் இருக் கிறார்கள்.

2003 ஆம் ஆண்டில் ஆபிரிக்காவில் உள்ள லைபீரிய நாட்டில் அரசுக்கு எதிரான கலவரங்களுக்கு இந்த படை அனுப்பப்பட்டு உதவி செய்து அந்த அரசை தூக்கி எறிய கூடிய வேலையை முடித்தது, அந்நிய நாட்டுக்குள் புகுந்து அப்பட்டமான முறையில் அரசுக்கு எதிரான செயல்களில் இறங்கினார்கள்.

அந்த நாட்டின் ஜனாதிபதியை சிஐஏ கடத்திச் செல்வதற்கு சிறப்பு திட்டத்தை தயாரித்துக் கொடுத் தவர்கள் இந்த கூலிப்படையை சேர்ந்தவர்கள்தான், ஐ.நா. சபையின் தலையிட்டால் அது நடைபெறவில்லை.



# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள்!

**(எம்.எம்.ஜெஸ்மின்)**

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு மிக அவசியத் தேவையாக காணப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்களை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் வழங்கியுள்ளார்.

அண்மையில் அந்த வைத்தியசாலைக்கு விஜயம் செய்த பிராந்திய பணிப்பாளர் வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடினார். அங்கு நிலவும் தேவைகள் குறைபாடுகள் குறித்தும் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து பிராந்திய பணிப்பாளர் பதில் வைத்திய அத்தியட்சகரும், மகப்பேற்று வைத்திய நிபுணருமான டாக்டர் எல்.சி.ஆர்.றொஹா னிடம் மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்களைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சத்திர சிகிச்சை நிபுணர் என்.அகிலன், பிராந்திய பொதுச் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ். ஷாபி, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.நியாஸ் அஹமட், வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் தலைவர் டாக்டர் ஏ.இஸ்ஸடீன் உள்ளிட்ட வைத்தியர்கள், வைத்தியசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# சமூக சேவை திணைக்கள நிதி ஒதுக்கீட்டுக் கொடுப்பனவு





**(சர்ஜுன் லாபீர்)**

சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள இரண்டு பயனாளிகளுக்கு கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் நோய்க் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபாவும் மற்றும் பி.எஸ்.டி.ஜி. வேலைத் திட்டத்தின் கீழ் மலசல கூடம் திருத்தத்துக்கான முதற்கட்ட கொடுப்பனவாக 30 ஆயிரம் ரூபாவும் பிரதேச செயலாளர் எஸ்.எல் முகம்மது ஹனிபாவால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர், சமூக சேவைப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவு கிராம சேவை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.





# மட்டக்களப்பு - சத்துருக்கொண்டான் கண்ணகி ஆலய இசை பாமாலை இறுவட்டு வெளியீடு!

(பழுவூரான்)

முந்நூறு வருடங்களுக்கு மேல் தொன்மை கொண்ட மட்டக்களப்பு – சத்துருக்கொண்டான் கண்ணகி அம்மன் ஆலய வரலாற்றை எடுத்துக் கூறும் இசை பாமாலை இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு ஆலய வளாகத்தில் இடம்பெற்றது .

இந்த அம்மன் காவியப் பாமாலையை ஆரையம்பதி கலைச்சுடர் தேசியக் கலைஞர் விஸ்வநாதன் பதம சிறி இயற்றி, பாடி இருந்தார்.

இந்த இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில், கண்ணகி அம்மன் ஆலயத்தின் வண்ணக்கர்மார்களான எஸ்.சண்முகநாதன், த.கௌரி, சி.சிவகுரு உட்படப் பலர் கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு ஆலய நிர்வாகத்தினருக்கும், பிரதேச வாழ் பெரியவர்களுக்கும், கொக்குவில் பனிச்சையடி பத்திர காளியம்மன் ஆலய நிர்வாகத்தினர், சத்துருக்கொண்டான் கொம்புச் சந்தி பிள்ளையார் ஆலய நிர்வாகத் தினருக்கும் இறுவட்டு வழங்கி வைக்கப்பட்டது.




# சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் வெசாக் தினத்தில் தான நிகழ்வுகள்




(த.சுபேசன்)

வெசாக் தினத்தை முன்னிட்டு நேற்று (23) வியாழக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் விசேட பூஜை மற்றும் தான நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பௌத்த மதகுருமார்கள் கலந்து கொண்டு விசேட வழிபாட்டு நிகழ்வுகளை நடத்தியிருந்தனர்.

மேலும் நிகழ்வில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இந்து மத குரு, சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.





# வாழ்வோசை நிறுவனத்தின் 25 ஆவது வருட நிறைவு விழா!

(பழுவூரான்)

செவிப்புலனற்ற மாணவர்களின் பாடசாலையான வாழ்வோசை பாடசாலையின் 25 ஆவது வருட நிறைவு விழா வை.எம்.சி.ஏ நிறுவனத்தின் தலைவர் வி.ஈ. தர்சன் தலைமையில் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

செவிப்புலனற்ற மாணவர்களின் கற்றல் நடவடிக்கையை மேம்படுத்தி அவர்களை சமூகத்தில் இணைக்கும் செயற்பாட்டை இந்தப் பாடசாலை கடந்த 25 வருடமாக மேற்கொண்டு வருகின்றது.

இந்தப் பாடசாலை மாணவர்களின் கண்கவர் நடனங்கள் அரங்கேற்றப்பட்டன. பழைய மாணவர்களின் பாடசாலை அனுபவங்கள் இதன் போது பகிரப்பட்டன. மேலும் இந்த மாணவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகள் மற்றும் கைவினைப் பொருள்கள் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

செவிப்புலனற்ற மாணவர்களுக்கான பாடசாலையின் நிறுவனர் கலாநிதி டனியல் டேவிற் நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இந் நிகழ்வில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு மற்றும் கிழக்குக்கான தவிசாளர் அருட்பணி சாமுவேல் சுபேந்திரன், கிழக்குப் பல்கலைக்கழகம் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கெனடி, முறைசாரா மற்றும் சிறப்பு கல்வி பிரிவினுடைய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். தயாநந்தன், சமூக சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எம். எம். அலியார், வை.எம்.சி.ஏ. நிறுவன உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# கதிர்காமத்தில் நடப்பட்டது ஆடிவேல் கன்னிக்கால்!

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் ஆடிவேல் விழா எசல திருவிழாவுக்கான கன்னிக்கால் அல்லது பந்தல்கால் நடும் நிகழ்வு இன்று (24) வெள்ளிக்கிழமை அதி காலை 4.30 மணியளவில் சுப முகூர்த்தத்துடன் இடம்பெற்றது.

தொடர்ந்து 45 நாள்கள் கப்சித்து வாவின் பின்னர், எதிர்வரும் ஜுலை 06 ஆம் திகதி கொடியேற்றத்துடன் முதல் பெரஹெரா திருவிழா ஆரம்ப மாகவுள்ளது.

16 நாள்கள் நடைபெறும் இந்த ஊர்வலம் ஜுலை 21 ஆம் திகதி இரவு நிறைவுபெற்று ஜுலை 22ஆம் திகதி மாணிக்ககங்கையில் நீர் வெட்டு திருவிழா இடம்பெறும்.



இத்துடன் திருவிழா நிறைவடையும் என்று கதிர்காமம் ஆலய பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர தெரிவித்தார்.








# பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கவுள்ள திருகோணமலை ஸாஹிரா மாணவன்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை ஸாஹிராக் கல்லூரி மாணவன் பஃமி ஹசன் சலாமா எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதி பாக்கு நீரிணையை நீந்திக்கடக்கும் சாதனையை நிகழ்த்த உள்ளார்.

தரம் 10 இல் கல்வி கற்கும் 15 வயதான இவர் கடந்த மூன்று மாதங்களாக இந்தச் சாதனை முயற்சிக்கான தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்தியாவின் தனுஸ்கோடி, அரிச்சல் முனையில் இருந்து தலை மன்னார் வரையான 32 கிலோ மீற்றர் தூரத்தை 8 மணி நேரத்தில் தாம் கடக்க எண்ணியுள்ளார் என்று புதனன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சலாமா கூறினார்.

கடந்த 18 ஆம் திகதி இவர் பாக்கு நீரிணையின் இலங்கை கடல் எல்லையில் இருந்து தலைமன்னார் வரையான தூரத்தை பயிற்சி அடிப்படையில் நீந்தி கடந்துள்ளார்.

இவருக்கான நீச்சல் பயிற்ச்சிகளை விமானப்படை கோப்பிறல் றொசான் அபேசுந்தர வழங்கி வருகின்றார்.

இந்தப் பயிற்றுநர் 2021 ஆம் ஆண்டு தலை மன்னாரில் இருந்து தனுஸ்கோடிக்கு நீந்திச் சென்று மீளவும் அங்கிருந்து தலை மன்னாருக்கு 28 மணித்தியாலம், 19 நிமிடம், 58 செக்கனில் நீச்சலை நிறைவு செய்து, ஆழிக் குமரன் ஆனந்தன் ஏற்படுத்தியிருந்த 51 மணிநேர சாதனையை முறியடித்த சாதனையாளர் ஆவார். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த திருகோணமலையைச் சேரந்த ஹறிகரன் தன்வந்தையையும் இவரே பயிற்றுவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







# அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபருக்குப் பாராட்டு!

(கே. எ. ஹமீட் )

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் அண்மையில் இலங்கை நிர்வாக சேவையின் அதியுயர் விசேட தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதனை கௌரவிக்கும் முகமாக நேற்று முன்தினம் (22) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா பொன்னாடை போர்த்தி அவரைக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் கணக்காளர் எஸ். எல்.சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், அம்பாறை மாவட்ட உளவளத்துறை ஆலோசகர் மனூஸ் அபூபக்கர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# கல்விமாணி பட்டதாரிகளைச் சந்தித்த வடமேல் மாகாண ஆளுனர் நஸீர்!

(எம்.எம்.ஜெஸ்மின்)

வடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட், மாகாணத்தில் வசிக்கும் பல்கலைக்கழக கல்விமாணி பட்டதாரிகளுடன் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

வடமேல் மாகாண ஆளுனர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில், கொழும்புப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகங்களில் கல்விமாணிப் பட்டப் படிப்பை நிறைவு செய்துள்ள 24 பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத்தில் கல்விமாணிப் பட்டம் பெற்றுள்ள தங்களுக்கு அரச பட்டதாரி நியமனங்களின்போது இழைக்கப்படும் அநீதிகள் குறித்து இதன்போது அவர்கள் ஆளுனரிடம் தங்கள் தரப்பு முறைப்பாடுகளை முன்வைத்தனர்.

அவர்களின் குறைகளை கரிசனையுடன் கேட்டறிந்த ஆளுனர் நஸீர் அஹமட், வடமேல் மாகாணத்தில் அரச நியமனங்கள் அல்லது ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்போது கல்விமாணிப் பட்டம் பெற்றுள்ள பட்டதாரிகளையும் உள்ளடக்கி நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வார் என்று உறுதியளித்தார்.

# மன்னார் மாவட்ட கராத்தே சம்மேளன புதிய தலைவர்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட கராத்தே சம் மேளன தலைவராக மன்னார் கராத்தே பயிற்சி நிறுவன தலைவர் அன்ரனி இன்பராஜ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் கராத்தேயில் மாகாண மற்றும் மாவட்ட சம்மேளன தலைவர்களை தேர்ந் தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த தெரிவுக் குழுவின் மன்னார் விடத்தல் தீவை சேர்ந்த சீ கான் அன்ரனி இன்பராஜ், மன்னார் மாவட்டக் கராத்தே சமமேளன நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.







# வெசாக் கூடுகளைக் காட்சிப்படுத்திய இரத்தினபுரி தமிழ் ஆரம்ப மாணவர்

(ஸ்ரீனிவாசகம் இரவீந்திரன்)

இரத்தினபுரி தமிழ் ஆரம்ப வித்தியாலயத்தில் வெசாக் பண்டிகையை முன்னிட்டு பாடசாலை மாணவர்களால் வெசாக் கூடுகள் செய்யப்பட்டுக் காட்சிப் படுத்தப்பட்டன.

இதனை இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலய உப அதிபர் எஸ். இரவிச் சந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மாணவர்கள் தாம் அமைத்த வெசாக் கூடுகளுடன் காணப்படுகின்றனர்.





# அரசமைப்பை பாதுகாக்கும் போராட்டம்தான் தேர்தல்

## ராகுல் காந்தி பிரச்சாரம்

இந்திய அரசமைப்பு சட்டத்தை பாதுகாப்பதற்கான போராட்டம் தான் இந்த தேர்தல் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலையொட்டி வடகிழக்கு டில்லியின் தில்ஷத் கார்டன் பகுதியில் காங்கிரஸ் சார்பில் நேற்று பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் காங்கிரஸ் வேட்பாளரை கன்னையா குமாரை ஆதரித்து ராகுல் காந்தி உரையாற்றுகையில்,

"இந்திய அரசமைப்பு சட்டத்தை மாற்ற வேண்டும் என்பதே பா.ஜ.கவின் விருப்பமாக இருந்து வருகிறது. பா.ஜ.கவினர் அரசமைப்பு சட்டத்தை கிழித்து எறிய விரும்புகின்றனர். இந்திய அரசியலமைப்பையோ, இந்தியக் கொடியையோ அவர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை.

அரசியலமைப்பு சட்டத்தை மாற்ற விரும்புவதை இந்தத் தேர்தலில் இறுதியாக அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். அரசமைப்பு சட்டத்தை பாதுகாப்பதற் கான போராட்டம் தான் இந்த தேர்தல்.

நமது அரசியலமைப்பு சட்டம் வெறும் புத்தகம் அல்ல. மகாத்மா காந்தி, அம்பேத்கர் மற்றும் நேருவின் ஆயிரக்கணக்கான ஆண்டுகால சித்தாந்த பாரம்பரியத்தை அது கொண்டுள்ளது.

அரசியலமப்பு சட்டத்தை பா.ஜ.க. மாற்ற முயன்றால் எதிர்க்கட்சிகளையும் நாட்டின் கோடிக்கணக்கான மக்களையும் அக்கட்சி எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எனவே அதனை மாற்றும் தைரியம் அக்கட்சிக்கு இருக்காது என்று அவர்களிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்."– என்றார்.

# டில்லிவாசிகளின் வாக்குகள் ஜனநாயகத்தை பாதுகாக்கும்

## சோனியா காந்தி தெரிவிப்பு



மக்களவைத் தேர்தலின் 6 ஆம் கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறுகிறது. டில்லியில் உள்ள ஏழு மக்களவைத் தொகுதிகளுக்கும் அன்றைய தினம்தான் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

இதற்கான பிரச்சாரம் நேற்றுடன் ஓய்ந்த நிலையில், சோனியா காந்தி வீடியோ மூலம் விடுத்துள்ள செய்தியில்,

"நாட்டில் ஜனநாயகம், அரசியலமைப்பு சட்டத்தை காப்பாற்ற இண்டியா கூட்டணி போராடி வருகிறது. அதற்கு நீங்கள் உங்களது பங்களிப்பை வழங்க வேண்டும்.

இது மிக முக்கியமான தேர்தல் என்பதால் டில்லி மக்கள் அனைவரும் தவறாது தங்களது ஒவ்வொரு வாக்கின் மூலமும் இண்டியா கூட்டணியின் போராட்டத்துக்கு ஆதரவளிக்க வேண்டும். டில்லியில் உள்ள ஏழு மக்களவைத் தொகுதியிலும் இண்டியா கூட்டணி வேட்பாளர்தான் வெற்றி பெற வேண்டும்." – என்றார்.



# இடஒதுக்கீட்டை பறிப்பதற்கு இண்டியா கூட்டணி முயற்சி

## பிரதமர் மோடி குற்றச்சாட்டு


இடஒதுக்கீட்டை பறிப்பதற்கு இண்டியா கூட்டணி முயற்சிப்பதாக பிரதமர் மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

ஹரியாணாவில் 10 மக்களவைத் தொகுதிகள் உள்ளன. இந்த தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதையொட்டி ஹரியாணாவின் மகேந்திரகர் நகரில் நேற்று நடைபெற்ற பாஜக பிரச்சார கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"மக்களவைத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது. இதுவரை 5 கட்ட தேர்தல்கள் நிறைவு பெற்றுள்ளன. இப்போதே இண்டியா கூட்டணி தோல்வியை உணரத் தொடங்கிவிட்டது. இதன் காரணமாகவே வாக்குப்பதிவு சதவீதத்தில் வேறுபாடுகள் இருக்கின்றன. வாக்குப்பதிவு சதவீதம் தாமதமாக வெளியிடப்படுகிறது என்று இண்டியா கூட்டணி தலைவர்கள் புலம்ப தொடங்கிவிட்டனர்.

மத்தியில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பதவியேற்கும் என்பதை சிறு குழந்தைகள்கூட அறிந்து வைத்துள்ளனர். காங்கிரஸ் கட்சி ஆரம்பம் முதல்வாக்கு வங்கி அரசியலில் ஈடுபட்டு வருகிறது. பாரதத்தில் முஸ்லிம்களுக்கே முதலிடம் என்று அந்த கட்சி கூறுகிறது. பட்டியலின, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மக்களின் இடஒதுக்கீட்டை பறித்து முஸ்லிம்களுக்கு வழங்க இண்டியா கூட்டணி விரும்புகிறது.

மேற்குவங்கத்தில் ஊடுருவல்காரர்களுக்கு ஓ.பி.சி. சான்றிதழ் வழங்கப்பட்டது. இதை அந்த மாநில உயர் நீதிமன்றம் அண்மையில் ரத்து செய்திருக்கிறது. இந்த தீர்ப்பை ஏற்க மாட்டேன் என்று மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி கூறியிருக்கிறார். நான் உயிரோடு இருக்கும்வரை எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி. பிரிவினரின் இடஒதுக்கீட்டை யாராலும் பறிக்க முடியாது.





பாரத மக்கள் ஒவ்வொரு நாளும் ராம மந்திரத்தை உச்சரிக்கின்றனர். மத்தியில் இண்டியா கூட்டணி ஆட்சி அமைத்தால் ராம மந்திரத்தை உச்சரிப்போரை கைது செய்வார்கள். ஒட்டு மொத்த பாரதத்தில் இருந்து ராமரை அகற்ற காங்கிரஸ் விரும்புகிறது. அந்த கட்சி ஆட்சியில் இருந்த காலத்தில் அயோத்தில் ராமர் கோயில் கட்டுவதை அனுமதிக்கவில்லை. பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் அயோத்தியில் பிரம்மாண்ட ராமர் கோயில் கட்டப்பட்டு உள்ளது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 370 ஆவது சட்டப்பிரிவு மூலம் காஷ்மீர் தனி நாடாக பாவிக்கப்பட்டு வந்தது. அங்கு தேசிய கொடியைகூட ஏற்ற முடியாத சூழல் நிலவியது. பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் 370 ஆவது சட்டப்பிரிவு நீக்கப்பட்டு காஷ்மீரில் மூவர்ண கொடி கம்பீரமாக பறக்கிறது. இண்டியா கூட்டணி ஆட்சி அமைத்தால் 370 ஆவது சட்டப்பிரிவை மீண்டும் கொண்டு வருவோம் என்று கூறுகின்றனர். அவர்களுக்கு ஹரியாணா மக்கள் தேர்தலில் தகுந்த பாடத்தை கற்பிக்க வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளாக மத்தியில் நல்லாட்சியை வழங்கி உள்ளோம். இந்த காலத்தில் கடந்த கால காங்கிரஸ் ஆட்சியின் தவறுகளை சரி செய்து, நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தி வருகிறோம். இதன்காரணமாக ஹரியாணா மட்டுமன்றி நாடு முழுவதும் நெடுஞ்சாலைகள், அதிவேக வீதிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

புதிய வீதிகளால் டில்லி, சண்டிகர் இடையிலான தொலைவு குறைந்திருக்கிறது. துவாரகா எக்ஸ்பிரஸ் வீதி ஹரியாணாவின் குருகிராம் மக்களின் வாழ்க்கையை முழுவதுமாக மாற்றியிருக்கிறது. பா.ஜ.க. ஆட்சி அமைத்தால் அடுத்த 5 ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சியில் மிகப்பெரிய புரட்சி நடைபெறும்." – என்றார்.





# அபாயகரமான ஆயுதங்களை ரஷ்யாவுக்கு வழங்கும் சீனா

## பிரிட்டன் குற்றச்சாட்டு



உக்ரைனுக்கு எதிரான போரில் பயன்படுத்துவதற்காக ரஷ்யாவுக்கு சீனா அபாயகரமான ஆயுதங்களை விநியோகிப்பதாக பிரிட்டன் குற்றஞ் சாட்டியுள்ளது.

உக்ரைனின் வடகிழக்குப் பகுதியில் ரஷ்யா அண்மைக் காலமாக தீவிரமாக தாக்குதல் நடத்தி முன்னேறிவரும் சூழலில் சீனா மீது இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இது குறித்து பிரிட்டன் பாதுகாப்புத் துறை அமைச்சர் கிரான்ட் ஷாப்ஸ் தெரிவிக்கையில்,

"எங்களுக்குக் கிடைத்துள்ள புதிய உளவுத் தகவலின்படி, உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்கான ஆயுத தளவாடங்களை ரஷ்யாவுக்கு சீனா விநியோகித்துவருகிறது. எனவே, மேலை நாடுகள் விழிப்படைந்து உக்ரைனுக்கான உதவிகளை அதிகரிக்க வேண்டும்." என்றார்.

ஏற்கனவே, உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்கான ஆயுதங்களை தயாரிப்பதற்குத் தேவைப்படும் முக்கிய பொருள்களை ரஷ்யாவுக்கு சீனா அனுப்புவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது. ஆனால், ரஷ்யாவுக்கு சீனா நேரடியாக ஆயுதங்களை விற்பனை செய்வதாகக் கூறப்படுவது இதுவே முதல்முறை.

இருந்தாலும், பிரிட்டன் பாதுகாப்புத் துறை அமைச்சரின் இந்தத் தகவல் குறித்து அமெரிக்கா சந்தேகம் தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் கூறுகையில், '

"ரஷ்யாவின் போர் முயற்சிக்கு சீனா உதவியளிப்பது எங்களுக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் ரஷ்யாவுக்கு அந்த நாடு நேரடியாக ஆயுதங்கள் அனுப்புவதாகத் தெரியவில்லை"–' என்றார்.

பிரிட்டனின் இந்தக் குற்றச்சாட்டை சீனாவும் மறுத்துள்ளது. இது குறித்து லண்டனிலுள்ள சீன தூதரக செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

"ரஷ்யாவுக்கு சீனா ஆயுதங்கள் விநியோகிப்பதாகக் கூறுவது அடிப்படை முகாந்திரமற்றது இதன் மூலம் பிரிட்டன் சீனா மீது பொய்யான குற்றச்சாட்டை பரப்பிவருகிறது" என்று சாடியுள்ளார்.

## பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு:

# நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை தனியார் மயமாக்க பாகிஸ்தான் திட்டம்

பொருளாதார நெருக்கடியை தீர்க்க பாகிஸ்தான் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை தனியார் மயமாக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில ஆண்டுகளாகவே பாகிஸ்தான் கடும் பொருளாதார நெருக்கடியில் திணறி வருகின்றது.

இதனால் அங்கு பண வீக்கம் அதிகரித்ததால் பொது மக்களுக்கு தேவையான பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக பாகிஸ்தான் அரசு உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றிடம் அதிக கடன்களை பெற்றுள்ளது.

ஆனால் நெருக்கடியை சமாளிக்க போராடும் அந்நாட்டு அரசு புதிய திட்டத்தை கையில் எடுத்துள்ளது.

அதன்படி நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட உள்ளன. முதற்கட்டமாக பாகிஸ்தான் இன்டர்நேஷனல் ஏர்லைன்ஸ் நிறுவனம் தனியார் மயமாக்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.




அரசாங்கத்தின் சொந்த பாரிய நிறுவனமான பாகிஸ்தான் இன்டர்நேஷனல் ஏர்லைன்ஸ் கடந்த 20 ஆண்டுகளில் சுமார் 3.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டத்தை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பப்புவா நியூ கினியாவில் நிலச்சரிவு; நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழப்பு

பப்புவா நியூ கினியாவில் இன்று பாரிய நிலச்சரிவொன்று ஏற்பட்டுள்ள நிலையில், இதில் சிக்குண்டு சுமார் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

தென் பசிபிக் தீவு நாடான பப்புவா நியூ கினியாவின் தலைநகர் போர்ட் மோர்ஸ்பிக்கு வடமேற்கே சுமார் 600 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள எங்கா மாகாணத்தின் காகலம் எனும் கிராமத்திலேயே இன்று அதிகாலை நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலச்சரிவில் சிக்கி சுமார் 100 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

நிலச்சரிவில் சிக்குண்டு பலர் காணாமற் போயுள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

நிலச்சரிவில் புதையுண்டுள்ள உடல்களை உள்ளூர்வாசிகள் மீட்டெடுக்கும் காட்சி சமூக வலைத்தளங்களில் வெளியாகி, வைரலாகி வருகிறது.

அங்கு மீட்புக் குழுவினர் விரைந்துள்ள நிலையில், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு மீட்புப் பணிகள் தொடர்வதாகவும் சர்வதேச செய்திகள் குறிப்பிட்டுள்ளன.





கனடா முரசு

பக்கங்கள் - 4

வெள்ளிக்கிழமை 24/05/2024

## பெண்கள் தேசிய கூடைப்பந்து அணி டொரன்டோ பெற்றுள்ளது

ஒன்ராரியோ, மே 24

பெண்கள் தேசிய கூடைப்பந்து சங்கத்தின் அணியொன்றை டொரன்டோ பெற்றுள்ளது.

இதன் மூலம் அமெரிக்காவுக்கு வெளியே பெண்கள் தேசிய C2 ▶



# கூடாரங்களை அகற்றுவதற்கு 24 மணி நேரக் கால அவகாசம்

## டொரன்டோ பல்கலைக்கழக நிர்வாகம் போராட்டக்காரர்களுக்கு வழங்கியது

ஒன்ராரியோ, மே 24

பலஸ்தீனத்திற்கு ஆதரவான கூடார முகாம்களை பல்கைக்கழக வளாகத்துக்குள் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அவற்றை அகற்றி போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர்வதற்கு டொரன்டோ பல்கலைக்கழக நிர்வாகம் 24 மணி நேர கால அவகாசம் வழங்கியுள்ளது.

இது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்தியில், பல்கலைக்கழகத்தின் முதலீடுகளை வெளிப்படுத்துவதற்கான விருப்பங்களைக் கருத்தில் கொள்ள ஒரு பணிக்குழு நியமிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கோரியபடி இஸ்ரேலிய பல்கலைக்கழகங்களுடனான எந்தவொரு கூட்டாண்மையையும் நிறுத்தப்போவதில்லை என்று பல்கலைக்கழகம் கூறியுள்ளது.

முகாம் அமைப்பாளர்களுடன் இந்த விடயம் தொடர்பில் உடன்பாடு எட்டப்படாவிட்டால், அத்து மீறல் அறிவிப்பு வெளியிடப்படும் என்று பல்கலைக் கழகத் தலைவர் மெரிக் கெர்ட்லர் தெரிவித்துள்ளார்.

# ஹிஜாப்பை பலவந்தமாக அகற்றினாராம் 74 வயோதிப மாதுவின் மீது குற்றச்சாட்டு



ஒன்ராரியோ, மே 24

அண்மையில் நடைபெற்ற போராட்டத்தில் பெண்ணொருவரின் ஹிஜாப் கழற்றப்பட்டதை அடுத்து, ஒட்டாவா பொலிஸாரின் வெறுப்புக் குற்றப் பிரிவு, பெயரிடப்படாத ஒரு வயதான பெண் மீது தாக்குதல், அச்சுறுத்தல் மூலம் துன்புறுத்துதல் மற்றும் குறும்பு செய்தல் ஆகிய குற்றங்களைச் சாட்டியுள்ளது.

இஸ்ரேல் ஸ்தாபிக்கப்பட்டு 76 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் இஸ்ரேல் கொடி உயர்த்தப்பட்ட பின்னர், இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனிய ஆதரவு குழுக்கள் கடந்த வாரம் நகர மண்டபத்திற்கு வெளியே கூடினர்.

இதன்போது, ஹிஜாப் அணிந்த ஒரு பெண் சட்டப்பூர்வமான ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தபோது, யாரோ ஒருவர் வந்து 'அபாண்டமான சைகைகளைச் செய்துகொண்டே' ஹிஜாப்பைக் கழற்றினார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் அந்த நபரை 74 வயதான பெண் என்று அடையாளப்படுத்தினர் எனவும், ஆனால் அவரது பெயரையோ அல்லது அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டிய நேரத்தையோ பகிரப்போவதில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.




# சில முக்கிய சந்தேக நபர்கள் குறித்து ஒன்றாரியோ பொலிஸார் எச்சரிக்கை

கனடாவில் சில சந்தேக நபர்கள் தொடர்பில் ஒன்றாரியோ மாகாணப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆயுத முனையில் வீடொன்றிற்குள் புகுந்து கொள்ளையிட்டனர் என இந்த ஐந்து சந்தேக நபர்கள் மீதும் முன்னதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் சந்தேக நபர்கள் பெரிய குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டுள்ளனர் என இப்போது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த ஆண்டில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது 37 பாரிய குற்றச் செயல்களுடன் இந்த நபர்கள் தொடர்புபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

**பெண்கள் தேசிய...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடைப்பந்து சங்கத்தின் அணியொன்றை கொண்ட முதல் நகரமாக டொரன்டோ மாறியுள்ளது.

இந்த அணி 2026 முதல் செயல்பட ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அணி லேரி டேனன்போம் தலைமையிலான கில்மர் ஸ்போர்ட்ஸ் வென்சர்ஸ்க்கு சொந்தமானதாகும்.

மேப்பிள் லீப் ஸ்போர்ட்ஸ் மற்றும் என்டர்டெயின்மன்ட்டின் தலைவராகவும் லேரி டேனன்போம் உள்ளார்.

என்.பி.ஏ டொரன்டோ ரெப்டர்ஸ், என்.எச்.எல். மேபிள் லீப்ஸ் அணிகள் உள்ளடங்கலாக பல அணிகளின் உரிமைத்துவத்தை மேப்பிள் லீப் ஸ்போர்ட்ஸ் மற்றும் என்டர்டெயின்மன்ட் வைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# பரிசு விழுந்த லொத்தர் சீட்டை திருடிய இரண்டு பேர் சிக்கினர்

கனடாவில் ஐம்பதாயிரம் டொலர்கள் பெறுமதியான லொத்தர் சீட்டு ஒன்றை களவாடினர் என்று இரண்டு பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பரிசு வென்றெடுக்கப்பட்ட லொத்தர் சீட்டு ஒன்றே இவ்வாறு களவாடப் பட்டுள்ளது.

தென்மேற்கு ஒன்றாரியோவில் மிட்செலில் அமைந்துள்ள கடையொன் றில் பணியாற்றும் பணியாளர்கள் மீது இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

இந்த லொத்தர் சீட்டைஒ பணியா ளர் ஒருவர் களவாடினார் எனவும் அவ ரது உதவியாளர் அந்த பணப் பரிசைப் பெற்றுக்கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




44 வயதான அனிட்டா ரஸல் மற்றும் 51 வயதான மெலெனி தொம்சன் ஆகியோர் மீதே இவ்வாறு லொத்தர் சீட்டு களவுச் சம்பவத்துடன் தொடர்பு டைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட் டுள்ளன.

# கனடியர்களின் வெளிநாட்டில் பிறந்த பிள்ளைகளுக்கும் கனடா குடியுரிமை



**ஒன்ராரியோ, மே 24**

நாட்டிற்கு வெளியே பிறந்த தங்கள் குழந்தைகளுக்கு குடியுரிமை உரிமை களை வழங்க கனடியர்களை அனு மதிக்கும் புதிய சட்டமூலம் ஒன்று நாடா ளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு அமைச்சர் மார்க் மில்லரி னால் நேற்று மே 23ஆம் திகதி நாடா ளுமன்றத்தில் இந்தச் சட்டமூலம் சமர்ப் பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் பிறந்த கனேடிய பெற் றோர்கள் தங்கள் குழந்தை கனடா வில் பிறந்தால் தவிர அவர்களின் குடி யுரிமையை பிள்ளைக்கு வழங்க முடியாது என 2009ஆம் ஆண்டில், முன்னாள் கன்சர்வேடிவ் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பரின் அரசாங்கம் சட் டத்தை மாற்றியிருந்தது.

இந்த திருத்தங்களின் விளைவாக குடியுரிமை உரிமைகளைப் பெறாத வர்கள் 'இழந்த கனடியர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள்.

புதிய சட்டமூலம் அந்த மாற்றத்தை செயல்தவிர்க்க உள்ளது.

# பார்மகேர் மருந்துகளின் பட்டியலில் மேலும் சேர்க்க அரசாங்கம் தயாராம்!



ஒன்ராரியோ, மே 24

அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட பார்மகேர் திட்டத்தின் கீழ் உள்ள மருந்துகளின் பட்டியலில் கூடுதல் மருந்துகளைச் சேர்க்க அரசாங்கம் தயாராக உள்ளது என்று சுகாதார அமைச்சர் மார்க் ஹொலண்ட் தெரிவித்துள்ளார்.

லிபரல் கட்சியினரின் பார்மகேர் சட்டமூலத்தை ஆய்வு செய்யும் நாடாளுமன்றக் குழுவில் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் ஹொலண்ட் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கன்சர்வேடிவ் சுகாதார விமர்சகர் ஸ்டீபன் எல்லிஸ் அமைச்சரிடம் ஏன் நீரிழிவு எதிர்ப்பு மருந்துகளின் ஒரு வகையான செமகுளுடைட் இந்த சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்ட மருந்துகளின் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்று வினவியுள்ளார்.

பெப்ரவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமூலம், கருத்தடை மற்றும் நீரிழிவு மருந்துகள் மற்றும் விநியோகங்களை உள்ளடக்கிய உலகளாவிய மருந்தகத் திட்டத்தை நோக்கிய ஒரு திட்டத்தைப் பட்டியலிடுகிறது.

சர்க்கரை நோய்க்கான புதிய செமகுளுடைட் மருந்தான ஓசெம் பிக் இதில் இல்லை, இது எடை இழப்பு மருந்தாக லேபிளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

# வெறுப்புப் பேச்சுக் குற்றச்சாட்டுகளுக்கு தற்காப்பாக மதத்தை பாவிக்க முடியாது!

## அதற்கான யோசனை சாத்தியமாக ஆராய்வு



ஒன்ராரியோ, மே 24

வெறுக்கத்தக்க பேச்சுக் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சாத்தியமான தற்காப்பாக மதத்தை அகற்றும் யோசனையை ஆராய்வதில்தான் 'மிகவும் ஆர்வமாக' இருப்பதாகவும், மத வெளிப்பாட்டின் மீது குளிர்ச்சியை ஏற்படுத்தும் வாய்ப்பைப் பற்றி கவலைப்படுவதாகவும் கனடாவின் சிறப்புத் தூதர் தெரிவித்துள்ளார்.

அதில் ஹோலோகாஸ்ட் நினைவகத்தைப் பாதுகாப்பதும் அடங்கும் என பல்கலைக்கழக வளாகங்களில் யூத எதிர்ப்பு பற்றி ஆய்வு செய்து வரும் நாடாளுமன்றக் குழுவின் முன் கருத்து தெரிவித்த டெபோரா லியோன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், இந்த விஷயத்தில் இறுதிக் கருத்தை வழங்கத் தயாராக இல்லை என்றும், நீதித்துறை அதிகாரிகளுடன் இன்னும் விவாதித்து வருகிறார் எனவும் லியோன்ஸ் கூறியுள்ளார்.

கடந்த இலையுதிர்காலத்தில் இஸ்ரேல் – ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறை அதிகரிப்பு குறித்து யூத தலைவர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பல மாதங்களாக கவலை தெரிவித்து வருகின்றனர்.

# வெளிநாட்டுக்கான உதவிகளில் ஐந்தில் ஒரு பங்கு கனடாவின் எல்லைகளுக்குள்ளேயே செலவாம்!



ஒன்ராரியோ, மே 24

உலகின் பணக்கார நாடுகளில் சிலவற்றில் வெளிநாட்டு உதவிக்கு கனடா முதன்மையான பங்களிப்பாளர்களில் ஒன்றாக இருந்தாலும், செலவினத்தில் ஐந்தில் ஒரு பங்கு கனடாவின் எல்லைகளை விட்டு வெளியேறுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்புக்கு கனடாவின் உதவியில் 19 சதவீதம் கனடாவில் உள்ள அகதிகள் மற்றும் உக்ரேனியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு கனடா 8 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் உதவிக்காக செலவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அதில் 1.5 பில்லியன் டொலர்கள் கனடாவில் தங்களுடைய முதல் ஆண்டில் ரஷ்யப் படையெடுப்பிலிருந்து வெளியேறிய அகதிகள், புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் உக்ரேனியர்களுக்கு ஆதரவாகச் சென்றது.